Registered as a Newspaper

செட்டிங் சூட்டிங்
றெடி மட் சேட்ஸ்
சிறுபிள்ளைகளின் ஆடைகள்
போன்ற வற்றிற்கு நாட வேண்டிய இடம்
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 2-00

Specialist in
WEDDI G SARIES
and all other
Requirements in
Textiles
CROWNS
22 A, MODEL MARKET,
JAFFNA.

ஏடு: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு வைகாசி மீ 23 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 19 (05 - 06 - 1988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:97

# கிழக்கைக் காப்பாற்றுவது வடக்கு மக்கள் பொறுப்பு

## சிங்களக் குடியேற்றம் குறித்து முஸ்லிம் பிரமுகர் விவரிப்பு

— அலுவலகச் செய்தியாளர்கள்: எஸ். ராஜ்குமார், அகில்ராஜ் —

யாழ்ப்பாணம் ஜூன் 5

வடக்கு கிழக்கு இணைப்புப்பற்றிப் பேசப்படுகிறது. அது அவசியம் ஆனால் கிழக்குடன் வடக்கை இணைப்பது என்ற நிலை இல்லாமல் வடக்குடன் கிழக்கை இணைக்கவேண்டும். அப்போதுதான் கிழக்கைச் சிங்களக் குடியேற்றத்தில் இருந்து பாதுகாக்க முடியும் கிழக்கைப் பாதுகாக்கும் பொறுப்பு வடபகுதி மக்களையே பெருமளவில் சாரும்

இவ்வாறு தெரிவித்தார் பொத்துவில் விவசாயிகள் சம்மேளனத்தின் பொதுச்செயலாளரும், கிழக்கிலங்கை முஸ்லிம் பிரமுகருமான ஜனாப் ஈஸ்டர் இப்ராஹீம்.

அடகு வைத்தோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கிழக்கு மாகாண நகை அடகு வைத்தோர் பிரச்சினை பற்றி ஜனாப். ஈஸ்டர் இப்ராஹீம் உரையாற்றினார்.

அப்போது அவர், கிழக்கில்நகைகளை அடகு வைத்த விவசாயிகளின் நிலைமையையும் மக்கள் வங்கியின் போக்கையும் விரிவாக எடுத்துரைத்தார்.

பேச்சின் ஒரு கட்டத்தில் அவர் கிழக்கிலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு, சிங்களக் குடியேற்றத்தால் ஏற்பட்டு வரும் ஆபத்தை விளக்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

கிழக்கைக் காப்பாற்றுவதற்கு வடபகுதி மக்கள் முன்வரவேண்டும்.

வடபகுதியை கிழக்குப் பகுதியுடன் இணைப்பது என்ற நிலை இருந்தால் கிழக்குடன் சேர்ந்து வடக்கும் பேரினவாதிகளின் பிரதேசமாக மாறிவிடும் அபாயம் ஏற்படக் கூடும்.

எனவே வடபுலத்துடன் கிழக்கை இணைப்பதன் மூலமே வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக தொடர்ந்து இருக்கமுடியும். இதற்கு கிழக்குப் பகுதியினரை விட, வடக்குப் பகுதியினரே கூடியகவனமெடுத்து இணைப்பிற்கான வலியுறுத்தல்களை மேற்கொள்ளவேண்டும்

வடபகுதி மக்களுக்கு இனப்பிரச்சினையேயில்லை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கு மின்சாரம்: திருத்த வேலைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடபகுதி மின்சார விநியோகத்திற்கு வகைசெய்யும் பொருட்டு திருத்த வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

களத்தாவவுக்கும் ஹபரணவுக்கும் இடையே விஷமிகளால் தகர்க்கப்பட்ட மின் கோபுரத்தை மீள அமைக்கும் வேலைகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



பின்னைச் சும்மாவே, வேட்பாளர்களுக்கு நடக்கிற சம்பவங்களையும், பயமுறுத்தல்களையும் கேட்கக்கேட்க இருதயம் அடி இறவேகத்திலேயே மாரடைப்பு வந்து விடும்!

## வெள்ளம்: 80 ஆயிரம் பேர் வீடிழப்பு

கொழும்பு, ஜூன் 5

இரத்தினபுரியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சுமார் 80 ஆயிரம் பேர் வீடிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## ஆயுத, தளபாடங்களுடன் இந்திய இராணுவத்தின் ஒரு பகுதி திரும்புகிறது

### அடுத்த வாரத்தில் ஆரம்பம் என்கிறது பி. பி. சி.

கொழும்பு ஜூன் 5

இந்திய அமைதிப் படையின் ஒரு பிரிவினரும், ஆயுத, தளபாடங்களில் ஒரு பகுதியும் விரைவில் இந்தியா திரும்பும். முதல் தொகுதியினர் அடுத்த வாரம்திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது - இப்படி பி. பி. சி. நேற்று மாலை அறிவித்தது

கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் திரு மார்க்டலி இச்செய்தி அறிக்கையை அனுப்பி இருந்தார்.

கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திரிகளைத் தான் சந்தித்த போது அவர்கள் இதனை ஊர்ஜிதம் செய்தனர் என மார்க்டலி தெரிவித்திருக்கிறார் [உ-எ]

★ பிந்திய செய்தி ★

## செவ்வாயன்று ஒரு பிரிவு திரும்பும்

கொழும்பு ஜூன் 5

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்திய அமைதிப்படையினரில் ஒரு பிரிவு தாயகம் திரும்புவர்.

திருகோணமலையில் வழியனுப்பும் வைபவம் நடைபெறும் என்று இந்திய இராஜதந்திரிகள் தெரிவித்தனர்

இப்படி பிந்திக்கிடைத்த ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

வடக்கு கிழக்கு நிலைமை திருந்தியுள்ளது. ஆகவே தேவையற்ற துருப்பினர் திருப்பி அனுப்பப்படுவர் போர்க்கருவிகளும் திருப்பி அனுப்பப்படும்.

இப்படி இந்திய ராஜதந்திரிகள் தெரிவித்தனர் என்று அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது [அ-எ]

## வேட்பாளர் மரணம்

கொழும்பு ஜூன் 5

தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவிருந்த சுயேட்சை வேட்பாளர் ஒருவர் கடந்த வியாழன் மாரடைப்பினால் காலமானார் என்று

(6ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### அக்குரஸ்ஸவில் 5 பேர் கொலை

கொழும்பு, ஜூன் 5

கடந்த வியாழன் அக்குரஸ்ஸவில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

கொலையுண்டவர்கள் இன்னும் அடையாளங் காணப்படவில்லை (ஒ-எ)

### கிரனேட் வீச்சு!

கொழும்பு, ஜூன் 5

பொலிஸ் அதிகாரி எச். எல். பியசேனவின் வீட்டுக்குக் கிரனேட் வீசப்பட்டது

வீட்டுக்குக் காவலாக நின்ற இரண்டு கான்ஸ்டபிள்கள் அப்போது காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு இடம் பெற்றது (ஒ-எ)

### ஹெலி விபத்து: மேலும் ஒருவர் மரணம்

கொழும்பு ஜூன் 5

கட்டுநாயக்கா அருகில் ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவத்தில் காயமடைந்த பைலட் லெப்டினன்ட் குசும் குமாரணதுங்கா ஆஸ்பத்திரியில் மரணமடைந்து விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது

புதன் இரவு ஹெலிக்கொப்டர் மின்கம்பியில் மோதி விபத்துக்குள்ளானதும், இராணுவ உயர் அதிகாரியான லால் ஆரியதிலக அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார் என்பதும் தெரிந்ததே.

விபத்துக்குக் காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது (ஒ-எ)

### சோதனை

இருபாலை, கோப்பாய் பகுதிகளில் இந்திய அமைதிப்படையினர் சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்

இதேவேளை நேற்று பிறவுண்வீதி, ஸ்ரான்லி வீதி, பணிக்கூட்டு வீதி ஆகிய இடங்களை அமைதிப்படையினர் சுற்றிவளைத்துச் சோதனை நடத்தினர். [ஒ-10]

## குடாநாட்டில் வெடி கொளுத்த தடை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். குடாநாட்டுப் பகுதியில் வெடி கொளுத்துவதற்கு அமைதிப்படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைதிப் படையின் யாழ். நகரக் கொமாண்டர் அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெடி கொளுத்தப்படும் வேளைகளில், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதாக நினைத்து மக்கள் பீதியும், பதற்றமும் அடைகிறார்கள்.

அதனால் பொதுமக்களின் வசதியையும், நன்மையையும் கருதியே வெடி கொளுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்தப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## ஒரு நாளை முகாமில் கழித்த அரச ஊழியர்!

யாழ்ப்பாணம், ஜூன் 5

இந்திய அமைதிப் படையினரின் முகாமில் ஒரு நாள் இரவைக் கழித்தனர் வடமராட்சி அரச ஊழியர்கள்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

கடந்த வியாழக்கிழமை வடமராட்சிப் பகுதியில் உள்ள அரச ஊழியர்களை கூட்டிச் சென்ற படையினர், தம்முடன் ஒரு நாள் தங்கவைத்துத் தற்போதைய சிவில் நிர்வாகம் குறித்து விளக்கம் கோரினர் என்று சொல்லப்படுகிறது.

அன்றிரவு படையினர் ஊழியர்களைத் தம்முடன் தங்க வைத்திருந்துவிட்டு வெள்ளி கிழமை சம்பந்தப்பட்டவர்களின் பணியர்களையும், பெற்றோரையும் முகாமுக்கு அழைத்து அனைவரையும் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

ஜவான்களால் தாம் தாக்கப்படவில்லை என்று கையெழுத்துப்போட்டுக் கொடுத்ததாக விடுவிக்கப்பட்டவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டிச் செல்லப்பட்டவர்களில் வைத்தியர் ஒருவரும் அடங்கியிருந்ததாகத் தெரியவருகிறது. [ஒ-10]

# இரட்சகர் என நம்பினோம் கொடுமை புரிகிறார்களே!

## இந்தியப் படை குறித்து பிரபா

சென்னை, ஜூன் 5

இந்தியா தங்களுக்குப் பாதுகாவலராகவும், இரட்சகராகவும் இருக்கும் என்றுதான் ஈழத் தமிழர் நம்பி இருந்தனர். ஆனால் அதற்கு மாறாக, இந்தியப்படை ஈழத் தமிழர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது

இப்படித் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரன்

ஆபிரிக்க ஒற்றுமை இயக்க நாடுகளுக்கு எழு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சுபநேரம்

5—6—19·8
வைகாசி 23
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
8 52 முதல் 10 22 வரை
ராகுகாலம்:
4 22 முதல் 5 55வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திவ்ய நற்கருணைத் திருவிழா

## வட்டக்கச்சி நிலக்கண்ணி வெடியில் 18 ஜவான்கள் பலி

கடந்த ஞாயிற்றுக் கிழமை வட்டக்கச்சிப் பகுதியில் இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த பதினெட்டு ஜவான்கள் உயிரிழந்தனர்.

இத்தகவலை கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திரிகளை ஆதாரம் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அலம்பில் நடவடிக்கையில் கலந்து கொண்டிருந்த இந்திய ஜவான்களே இந்த நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த இன் கொழும்பு விஜயத்தின்போது இச்சம்பவம் இடம் பெற்றது.

இத்தகவல் அமைச்சரின் விஜயத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடும் எனக் கருதியதாலே அப்போது வெளியிடப்படவில்லை என்று ராஜதந்திரிகள் தெரிவித்தனர் என அச்செய்திகள் மேலும் தெரிவித்தன

அலம்பில் நடவடிக்கையின்போது ஏற்கனவே 20 இந்திய ஜவான்கள் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# ஈரோஸின் எதிர்ப்புப் போராட்டம் குடாநாட்டில் நாளை ஆரம்பம்

## தமிழர் தலைவிதியை அடுத்தவர் நிர்ணயித்தலாகாது என்கிறார் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், ஜூன் 5

ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) இயக்கத்தின் எதிர்ப்புப் போராட்டம் நாளை திங்கட்கிழமை ஆரும் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பமாகும்

இதனை இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் பேசும் மக்களது தலைவிதியை இரு அரசுகளும் தீர்மானிக்கும் நிலை மாற வேண்டும். தமிழ் தேசிய இனத்தின எண்ண அபிலாஷைகளுக்கு இடங்கொடுத்து எம்மவர்களின் சுயநிர்ணய உரிமை மதிக்கப்பட வேண்டுமென்பது வரலாற்று நியதியாகும். —என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையின் முக்கிய பகுதி வருமாறு:-

தற்போது மிக அதிகரித்த அளவில் முடுக்கி விடப்பட்டிருக்கும் இராணுவத்தின் நடவடிக்கைகள் தமிழ்பேசும் மக்களை பெரும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. தேடுதல் என்ற போர்வையில தொடரப்படும் இராணுவ நடவடிக்கைகளால் தமிழ்பேசும் மக்கள் சொல்லொணாத்துன்பங்களை தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு யூலையில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சலாமின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம்

வடமராட்சி, ஜூன் 5

கடந்தவியாழக்கிழமை வல்வெட்டித்துறை வேம்படியில் இடம் பெற்ற சுற்றி வளைப்பின் போது வீர மரணம் அடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான சலாம் என்று அழைக்கப்படும் சின்னக்குட்டி தவராசாவின் பூதவுடல் இமையாணனில் தீயுடன் சங்கமம் ஆனது.

சலாமின் பூதவுடல் நேற்றுமுன்தினம்வல்வை ஆந்திராணி ஆஸ்பத்திரி மூலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பூதவுடல் புலிக்கொடியினால் போர்க்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட வாகன பவனியாக, வல்வெட்டித்துறையில் இருந்து சொந்த ஊரான இமையாணனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்ட வல்வெட்டித்துறை, வல்வெட்டி, உடுப்பிட்டி, இமையாணன் வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. புலிக் கொடிகளும் அரைக்கம்பத்தில் தொங்க விடப்பட்டிருந்தன.

ஊர்வலத்தின்முன்னும் பின்னும அமைதிப்படையினர் பெரும் அளவில் காணப்பட்டனர்.

சில இளைஞர்களை அவர்கள் விசாரணைக்குட்படுத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

எங்கள் ஸ்தாபனத்தில் (½") அரை இஞ்சி அல்கத்தீன் பைப் மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சாமுவேல், சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட். 206, 208 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/5295)

Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவு செய்யவும். Nallur Farm Centre. C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன் லேன் நல்லூர் [4074]

A-59 E V. மொடல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் S பரந்தாமன் இந்துக் கல்லூரி வளவு உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (4097)

புதிய நிலையில் உள்ள அவரி (Avery) 5 அந்தர் தராசு படிசெற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்னரக்ஸ், [illegible] வீதி, திருநெல்வேலி சந்தி. (4157)

சகலவிதமான T. V பூஸ்ரர், அன்ரனா வயர், றேடியோ றேடியோ உதிரிப்பாகங்கள் கைக்கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள் மின்குமிழ்கள் சகல மின் அடுப்புகள் T V ஸ்ரண்ட் எவர் சில்வர் பொருட்கள் ஹெஸ்தக்கர் எலெக்றிக் கேற்றில்களும் கராஜ் போட், எனாமல் பொருட்கள் அலுமினியப் பொருட்கள் பற்றும் றவலிங் பாக்ஸ் பாடசாலை பாக்ஸ் வாங்குவதற்கு நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C 5299)

கண்டி வீதியில் யாழ் மாநகர எல்லைக்குள் யூதாததேயு கரும்பு அருகே இரண்டு பரப்பு வீடு கட்டும் காணி உடன் விற்பனைக்கு உண்டு விளம்பரதல 58 உதயன் யாழ்ப்பாணம். (3450)

1976 ஆம் ஆண்டு கொம்பனி மூலம் இறக்குமதி செய்யப்பட்டு டாக்டர், உரிமையாளரால் தொடர்ந்து உபயோகிக்கப்பட்ட Peugeot304 குறைந்த மைல் ஓட்டங்கள் ஓடிய நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு விலாசம்: மயிலணி சுன்னாகம் [4170]

ஆலடிச்சந்திக்கு அருகாமையில் உள்ளதும். மானிப்பாய் வீதிக்கு போக்குவரவு உரிமை உடையதுமான தென்னங்காணி லஸ்திரணம் 9½ பரப்பு உள்ள காணி முழுதும் அல்லது துண்டு துண்டாய் விற்பனைக்குண்டு கமிஷன் கொடுக்கப்படமாட்டாது அரசடி பிறவுண் வீதியில் உள்ள "கேல்டன் சன்" கடையில் காலை 9 00 - 12 00 மணிக்குள் விசாரிக்கவும் [4160]

### காணி விற்பனைக்கு

வீடு கட்டுவதற்கு ஏற்ற 2 பரப்பு நீள சதுரக காணி கணறு வசதியுடன், கந்தர்மடம் சந்திக்கும் புகையிரதக் கடவைக்குமிடையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு No: 111, அரசடி, சந்தர்மடம் யாழ்ப்பாணம் [4162]

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 31 Sri இலக்கம்கொண்ட மொறிஸ் மறினர் டீசல் கார் விற்பனைக்கு உண்டு தொடர்பு: எஸ் பஸ்ரியன் 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4358)

உடன் விற்பனைக்கு மூன்று ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் உண்டு தொடர்பு கொள்ளவும்: இல: 168, முதலாம் குறுக்கு வீதி, (வேம்படி முன்பாக) யாழ்ப்பாணம். (4161)

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசன லேன், நல்லூர் (4073)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. ஒரு கோழி விலை 50/- ரூபா தொடர்பு: பொ. சொர்ணலிங்கம், 48/3 1 ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம் [3456]

விற்பனைக்கு- பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் T. V கசற் றேடியோ ஹோல் செற் சிறிய பெரிய அல்மாரிகள் காரியாலய மேசை சாப்பாட்டு மேசை கதிரைகள் Show Case கண்ணாடி மேசை மற்றும் பலவித பொருட்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் சந்திக்கருகாமை (3411)

### வீடு விற்பனை

கண்டிக்குழிக்கு அருகாமையில் சுவாமியார் வீதியிலுள்ள 1½ பரப்புக் காணியில் நல்லதண்ணீர் கிணற்றுடன் மூன்று அறையுடன் கூடிய வீடு மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: அ. பிரான்ஸிஸ் 7/13, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம். [4080]

### புதிய நூல் விற்பனை

தேசிய வருமானம்:- ஆக்கம்: மா சின்னத்தம்பி B A. B. Phil [Hons] [வலய ஆலோசக ஆசிரியர்] புதிய பாடத்திட்டக் கணக்குகளை உள்ளடக்கியது விலை ரூபா 20/- பாடசாலைகளுக்கும், தொகைக் கொள்வனவாளர்களுக்கும் விசேட கழிவுண்டு. விபரங்கட்கு "மகாலஷ்மி" அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை, சுதுமலை, மானிப்பாய் [4078]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hi-ex, Golden Comet பிறவுண் பேடுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hy - Line வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் Hybro புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம் டிலேன், கொக்குவில். (4151)

### காணி விற்பனை

பரந்தன் முல்லைத்தீவு றோட்டு சந்தியிலிருந்து ஒருமைல் தூரத்திலுள்ள பூங்காவனச்சந்தி றோட்டு முகப்பில ஆறு பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. நெற் கொள்வனவு சந்தைப்படுத்தல் ஆலை, கடைகளுக்கு சேந்திரஸ்தானம் தொடர்பு. க சுப்பையா, ஓய்வு பெற்ற ஓவசியர், தெல்லிப்பளை. [4095]

## தேவை

1. சமையற்காரர் [4]- சம்பளம் உணவுடன் 1,300/-, 2. பரிசோதகர் [6] – சம்பளம் உணவுடன் 600/- 3 கணக்காளர், லிகிதர் ஆண்/ பெண் (35 வயதுக்குட்பட்டவர்) 4. பாதுகாப்பு உத்தியோகத்தர் 5. சமையல் பரிசோதகர் வேலை பயில விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; Galaxy Rest No 30 Kannathiddi Road, Jaffna (4166)

நெசவாளர்கள் [Weavers] உடன் தேவை. திறமைக்கேற்ப அதிகூடிய சம்பளம் வழங்கப்படும். இலவச தங்குமிட வசதியும் உண்டு. பயிற்சியாளர்களும், தேவை நேரில் வரவும் மேலதிக விபரங்கட்கு சி குமாரலிங்கம், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மின்தறி ஆலை, பண்டத்தரிப்பு. [4165]

கைதடி நாவற்குழியில் உள்ள சகல வசதியும் கொண்ட வீட்டுக்கு ஆவிக்குரிய கிறிஸ்தவ குடும்பம் தேவை தொடர்பு: முகவரி 45, பூங்கா வீதி, குருநகர் யாழ்ப்பாணம் ஒருவாரத்திற்குள் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். [4167]

யாழ்ப்பாணம் புனித மரியாள் வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி சுற்றாடலில் ஐந்துபேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சந்தையா இலட்சுமணன் 48, அத்தியடி புதுவீதி யாழ்ப்பாணம். (4353)

### உடன்தேவை

அரசடி பிறவுண் வீதிச் சந்தியில் உள்ள Golden Sun என்ற கடைக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை. 15 – 20 இடைப்பட்ட வயதுடையவராய் இருத்தல் வேண்டும். G. C. E. [O/L] படித்தவராகவும் வண்ணார்பண்ணையில் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும். காலை 9 00- 12 00 மணிக்குள் தொடர்பு கொள்ளவும். [4159]

### மணமகள்தேவை

யாழ். இந்து வேளாள குல கணக்காளர் (Charted I C. M A) 30 வயது நட்சத்திரம்ரேவதி செவ்வாய் 8 இல், விவாகரத்துப் பெற்றவர். இவருக்கு படித்த அழகுள்ள தகுதியான மணமகளை தமையனார் தேடுகின்றார். கணக்காளர், வைத்தியர், பட்டதாரிகள், A/L படித்தவர்கள் ஜாதகத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்க. c/o 159 உதயன். [4357]

யாழ் இந்து வேளாள விஞ்ஞான பட்டதாரிக்கு நல்லொழுக்கம் அழகுடைய மணப்பெண் தேவை 33 வயதிற்குட்பட்ட விஞ்ஞான பட்டதாரிகள் விரும்பப்படுவர் சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க விளம்பர இல 155, C/o உதயன். யாழ்ப்பாணம். [3361]

### மணமக்கள் தேவையா?

சற்புத்திரரைப்பெற்று வாழக்கூடிய மணமக்கள் எல்லாச் சாதி சமயத்திலும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொடியாத் தோட்டம் யாழ்ப்பாணம். (4355)

### மணமகன் தேவை

கிறிஸ்தவ (அங்கிலிக்கன்) வேளாள குல, படித்த 27 வயது மணமகளுக்கு நல்ல பதவியிலுள்ள அதே சமய குல மணமகன் தேவை. நல்ல சீதனம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்) C/O 157, உதயன். யாழ்ப்பாணம். (3427)

### மணமகள் தேவை

சுவிஸ் நாட்டில் வேலை பார்க்கும் யாழ் இந்து வேளாள குல 30 வயதுடைய மணமகனுக்கு பெற்றோர் 27வயதுக்குட்பட்ட அதே குலத்தைச் சேர்ந்த மணப்பெண்ணை தேடுகிறார்கள். பிரான்ஸ் சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் விரும்பப்படுவர் சாதகம் படம் மற்றும் விபரத்துடன் விண்ணப்பிக்க C/o 160, உதயன். (4362)

### மணப் பெண்கள் தேவை

யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவவேளாள குலத்தைச் சேர்ந்த 32 வயதையுடைய M. B. B. S Doctor U. Kயில் தொழில் புரிபவருக்கும் 31 வயதுடைய M B A தரமுடைய U. S. Aயில் தொழில் புரிபவருக்கும், Doctor, Accountant B Sc, Computer படித்த பெண்கள் விரும்பத்தக்கது. குறிப்பு மற்றும் விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சாயி மங்கள 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் (4153)

## சேவை

40 வயதுடைய செவ்வாய் குற்றமற்றவரும், தாரமிழந்தவருமான விஸ்வகர்ம குலத்தைச் சேர்ந்தவருக்கும் 31 வயதுடைய பாங்கில் வேலை செய்பவருக்கும் 2 இல் செவ்வாயுடைய 40 வயதான பாங்கில் (Staff Officer) ஒருவருக்கும், இரண்டு கத்தோலிக்க பெண் டாக்டர்களுக்கும், தகுந்த மணமகன் மணமகள்தேவை. காணி வீடு விற்க அல்லது வாங்குவதற்கு விரும்புவர்களும் நாட வேண்டியது மாங்கல்யா ஸ்தாபனம் 81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4093)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna (Samy & Co— Shabra அருகாமையில்) (C5300)

### மணப்பந்தல்

யாழ் உயர் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பட்டதாரி [Double Degree] மணமகன் வயது 33 உயரம் 6 அடி, செவ்வாய் குற்றமற்றவர் தற்சமயம் ஐரோப்பிய நாடொன்றின் கம்பனியில் நிரந்தரமான பதவியில் உள்ளார். மணமகள் வெளிநாடு செல்லக்கூடியவராக இருத்தல் வேண்டும். முதல் கடிதத்திலேயே, சாதகக்குறிப்பு குடும்ப விபரம் சீதன விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் C/o 223, உதயன் யாழ்ப்பாணம். (4099)

### தவறிவிட்டது

எனது ஹொண்டா மோட்டார் சயிக்கிள் C 90, இல: 92/3973 பதிவுப் புத்தகம் தவறிவிட்டது கண்டு - எடுத்தவர்கள் தயவுசெய்து கையளிக்கவும் R V சத்தியலிங்கம், ஆர் வி. ஜி. [illegible] றோட், யாழ்ப்பாணம். [illegible]

### காணவில்லை

1. தம்பு சின்னத்துரை, 2 செல்லர் பொன்னுத்துரை, 3. ஐயாத்துரை பாலசிங்கம், 4. ஐயாத்துரை சந்திரகுமார், 5. கந்தையா இராசலிங்கம், 6. கட்டையன் இராசேந்திரன், 7. பொன்னுத்துரை தயானந்தன் ஆகியோரை சுடந்த ஒக்ரோபர் முதல் காணவில்லை; இவர்கள் பற்றிய விபரம் அறிந்தோர் அறியத்தரவும். நன்னியன் ஐயாத்துரை இருபாலை, மடத்தடி, யாழ்ப்பாணம். [4364]

திரு. இராமலிங்கம் சண்முகம்(130800114V) ஆகிய எனது அடையாள அட்டை செம்மணிசுடலையருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் 45, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (4363)

### வாடகைக்கு

நெல்லியடிச் சந்தியில் 12'X60' விஸ்தீரணமுள்ள கடை உடனடியாக குத்தகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு A E. ஜெயசிங்கம் அந்தோனியார் கோவிலடி சரஸ்வதி வித்தியாலய ஒழுங்கை கரவெட்டி. [3440]

### எக்ஸ்றே படப்பிடிப்பு

பருத்தித்துறை, ஜூன் 5

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கிழமையில் இரண்டு நாட்கள் "எக்ஸ்றே" படப்பிடிப்பு நடைபெறுகிறது, இப்படப் பிடிப்புத் தொடர்பான நோயாளிகள் செவ்வாய், வியாழன் ஆகிய கிழமை நாட்களில் வைத்தியசாலைக்கு வரவேண்டும் என்று பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ், கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார். [இ-118]

---

வேலணையில்

# கட்டடம் பூர்த்தி இல்லை மாணவர்கள் அவதி

வேலணை சரஸ்வதி வித்தியாலய புதிய வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் மாணவர்கள் இடவசதி இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் புதியகட்டடம் அமைப்பதற்கு 97 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்புதிய கட்டட வேலைகளை உடன்கட்டி முடித்து மாணவர்களின் இடநெருக்கடியை நிவர்த்தி செய்ய உதவுமாறு வித்தியாலய அபிவிருத்திச்சங்கமும் நலன் விரும்பிகளும் யாழ். மாவட்ட கல்வி பணிப்பாளருக்கு வேண்டுகோள்விடுத்திதுள்ளன

---

## மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு

# பிரயாண ஒழுங்குகள்

## (M. கீதபொன்கலன்)

### ★ குவைத் ★ சவூதி அரேபியா ★ டுபாய்

மேற்குறிப்பிட்ட நாடுகளில்

ஆஸ்பத்திரி கிளீனர்ஸ், எயார்போட் கிளீனர்ஸ், லேபரர்ஸ், மேசன், காப்பென்ரர், றூம் போய், வெயிட்டர், செக்கியூரிட்டிகார்ட், ட்ரைவர், மெக்கானிக், இலக்ரீஷியன்.

போன்ற வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

தரமான வேலை- நியாயமான சம்பளம்.

இரண்டு வருட ஒப்பந்தம், உணவு, தங்குமிடம், வைத்திய பராமரிப்பு யாவும் இலவசம்.

பாஸ்போட், 10 படம், போட்டோஸ்ரட் பிரதிகளுடன் நேரில் வரவும்.

குறிப்பு: முகவர் ஊரில் இருப்பதால் உடனே நேரில் வந்து சந்திக்கவும்.

## M. Geethaponkalan

முகவரி:
இலங்கைமாதா லேன்,
சில்லாலை கிழக்கு.
பண்டத்தரிப்பு,
[4025]

கொழும்பு முகவரி:
Faza Villa,
25/5, Central Road,
Colombo 12.
T. No. 21963

---

# உடனடி வேலைவாய்ப்பு

## KUWAIT CLEANERS KUWAIT DRIVERS

குவைத் கிளீனேர்ஸ் 700 பேர் உடன் தேவை

குவைத் றைவர்ஸ் வயது 18 — 49 வரை

பாஸ்போட்டும், 3 பாஸ்போட் சைஸ் படமும், அனுபவச் சான்றிதழ்கள்.

குவைத் றைவர்ஸ்க்கு மத்திய கிழக்கு நாட்டில் தொழில் பார்த்த Licence தேவை.

Saudi Arabiaவில் ALHODARI COMPANYக்கு Drivers, Cleaners உடன் தேவை.

Drivers;- 100 பேர், சம்பளம் 600+150 SR, வயது 21 — 49 வரை.

Cleaners;- சம்பளம் 400 SR. வயது 21 — 48 வரை

## Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. Cleaners | 2 Carpenters | 3. Mason | 4. Electrician |
| 5. Plumber | 6 Welder | 7. Tinker | 8. Spray painter |
| 9. Lathemen | 10. Auto Electrician | 11. Clerk | 12. Supervisior |
| 13 Civil Engineer | 14. Mechanical Engineer | 15. Electrical Engineer | 16. Electronic Engineer |
| 17. Mechanic | 18. A.C. Mechanic | 19. Drivers. | |

வயது 21 — 50 வரை

30-6-88க்கு முன் பயணம் செய்யலாம் போக விரும்புவோர் Passport, 3 Passport சைஸ் படங்கள், சான்றிதழ்களுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் Saudi, Singapore, Dubai, Abudhabi, Kuwait இவ்விடங்களிற்கு House-Maid ஆக போக விரும்புவோர்க்கும் அவற்றிற்குரிய முழு ஒழுங்குகளும் செய்து கொடுப்போம், செல்ல விரும்புவோர், பாஸ்போட், 3 பாஸ்போட் சைஸ்படம், 1 முழு கலர்படம் இவை யாவற்றுடனும் எமது காரியாலயத்தில் போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

மு. கு.:- முற்பணம் அறவிடமாட்டோம் தங்களுக்குரிய Visa பெறுத் தந்த பின்னர் அச்செலவுத் தொகையை பெற்றுக்கொள்வோம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7-00 மணி தொடக்கம் பி. ப. 1-00 மணி வரை

# T. V. Travels & Tourist

Brown Road,
(Kokuvil Railway Station Front)
KOKUVIL.

[C5301] BRANCH:- Courts Road, Mallakam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி - கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 6000 வரையிலான வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-ம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 08. 06. 88ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12. 00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.

நீர்வேலி.
1988. 06. 01. (ஒ-5352)


# மிதக்கும் பாலம் மூலம்

# திருமலை - மட்டக்களப்பு

# மாவட்டங்கள் இணைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 5

திருமலை — மட்டக்களப்பு மாவட்டங்களை பிரிக்கும் மகாவலிகங்கை மீது இந்திய படையினரால் மிதக்கும் பாலம் அமைக்கப்பட்டதை அடுத்து இரு மாவட்டங்களும் தற்போது இணைக்கப்பட்டுள்ளன.

இந்தியப் படையினர் நீரோட்டம் மீது மிதப்புக் கலை போட்டுப் போட்டர்கள் மூலம் இணைப்பு வழங்கியுள்ளனர்.

இப்பாலம் மீது இந்தியப்படையினரின் கனரக வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் செல்லலாம். நீர் மட்டம் அதிகரிக்க பாலம் உயரும் குறைய பாலம் இறங்கும்.

இப்பாலம் வழியாக போக்குவரத்து ஆரம்பிக்க முன்பு வெருகல் முருகன் ஆலயத்தில் விசேட பூசை நடைபெற்றது.

இந்தியப்படையின் இரு வயோதிப தம்பதிகள் சகிதம் தமது வாகனத்தில் பயணம் செய்து போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அப்பாலத்தின் பாதுகாப்புக் கருதி இந்தியப் படை முகாம் அவ்விடத்தில் அமைந்துள்ளது. (இ-21)

## கைவிடப்பட்ட பஜாஜ் ஸ்கூட்டர்

யாழ்ப்பாணம், ஜூன் 5

இளம் நீல நிற பஜாஜ் ஸ்கூட்டர் ஒன்று கொக்குவில் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாக யாழ் நகர கொமாண்டர் அலுவலகத்தில் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்கூட்டரின் இலக்கம் 83ஸ்ரீ 1364 ஆகும்.

ஸ்கூட்டரின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களுடன் வந்தால் இதனை பெற்றுக் கொள்ளலாம் என்று நகரகொமாண்டர் அலுவலகத்தைச் சேர்ந்த மேஜர் கொய்லோ தெரிவித்தார். [இ]

## அமெரிக்கன் கோதுமை மா

கொழும்பு ஜூன் 4

அமெரிக்கா — ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின்படி கடந்த மே மாதம் அமெரிக்க அரசாங்கம் 37,000 மெட்ரிக்தொன் அமெரிக்கன் மாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது. [ஐ-சி]

## சுண்டுக்குளியிலும் தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 5

சுண்டுக்குளி தபால் நிலையத்தில் இருந்தும் யாழ்—கொழும்பு நேரடித் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று முதல் இச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஏற்கனவே சுண்டுக்குளி தபால் நிலையத்துக்குத் தொலைபேசி வழங்கி இருந்த பொழுதும் அது இயங்க முடியாத நிலையில் இருந்தது.

இது தொடர்பாக தபாற் பகுதி அதிகாரிகளும், இந்திய அமைதிப் படையினரும் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக மீண்டும் இத்தத் தொலைபேசி சீராக இயங்கத் தொடங்கியுள்ளது. (ஒ—10)

## மகனின் மரணத்தில் தாயார் சந்தேகம்

### விசாரணையில் பகிரங்கத் தீர்ப்பு

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டமுன்பு மரணமான இளைஞர் ஒருவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தாயார் தெரிவித்ததை அடுத்து மரண விசாரணையில் பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தாமரைக்கேணி வாசியான யோ. ரமேஷ்குமார் [20வயது] என்பவர்தான் இறந்த இளைஞராவர்.

கடந்த 12ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர் 10ஆம் நாள் மரணமானார். பிரேத பரிசோதனை அறிக்கையில் சிறுநீரகம் ஈரல், சுவாசப்பை என்பன நிறமாற்றமடைந்திருப்பதாகவும் இருதயத்தில் ஒருவித நீர்த்தன்மை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் உள்ளுறுப்புக்களை கொழும்பு இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்குமாறு நகர மரணவிசாரணை அதிகாரி திரு த. சிவநாதன் உத்தரவிட்டார்.

அறிக்கை கிடைக்கும் வரை அவர் பகிரங்கத் தீர்ப்பு வழங்கினார்.

இந்தியஅமைதிப்படையினரே இந்த இளைஞரை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கக் கொண்டுவந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-21)


மக்களுக்கோர் நற்செய்தி



★ 20 வருடம் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களால்
★ 22 கரட் தங்கத்தில் உங்களுக்குத் தேவையான ஆபரணங்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

"மணி ஜுவலர்ஸ்"
உரிமையாளர்
மு. த. கனகரத்தினம் பத்தர்
கச்சாய் ரோட், சாவகச்சேரி.
(3848)



பிற்மன் பரீட்சை (லண்டன்)

ஜூலை/ ஆகஸ்ட் 19~8

ஆங்கிலம் - சுருக்கெழுத்து தட்டெழுத்து.

எதிர்வரும் ஜூலை / ஆகஸ்ட் 88 பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையிலோ, நீங்கள் சுருக்கெழுத்து / தட்டெழுத்து பயிலும் கல்வி ஸ்தாபனங்கள் மூலமோ தொடர்பு கொள்ளவும் விண்ணப்ப முடிவு திகதி 10. 06. 1988 க. பொ. த. ப. (சாதாரம்) பரீட்சைக்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன மேலதிக விபரங்களுக்கு:-

கல்வி உத்தியோகத்தர்,
கல்வி பிரிவு,
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை

சி. சிவமகாராசா
தலைவர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.
[சி-5356]



THANK YOU,
Dear SAINT ANTHONY of Padua,
For Your intercession
in obtaining for me
a Wondrous cure.
A Devotee in Pandateruppu
(3847)



Motor Vehicles Fitness
மோட்டார் வாகனங்கள்
லைசென்ஸ் புதுப்பித்தல்

1988ஆம் ஆண்டிற்கான லைசென்ஸ் புதுப்பித்தல் வேலைகள் மீண்டும் எமது தாபனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

Registrar,
PATRICIAN INSTITUTES
59, St Patrick's Road,
Jaffna.
[C-5293]



LONDON EXAMS
NOV - DEC 1988
★ Weekend Classes ★
இன்று ஆரம்பம்

| பயிற்சி நெறி | முழுக்கட்டணம் |
|---|---|
| CIMA Stage I - | ரூபா 800/- |
| IDPM I - | " 600/- |
| A A T [Sri Lanka] Stage I | |
| [English or Tamil Medium] | " 300/- |
| [BOTH] | " 500/- |
| I A B Foundation - | " 50/- |
| INTER | " 100/- |
| FINAL - | " 200/- |

A A T (SRI LANKA) STAGE II
ஆரம்பம: 16. 07. 1988

தகைமை, திறமை, தகுதி, அனுபவம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எல்லாம் ஒருங்கே நிறைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்கள்:

E. மரியாம்பிள்ளை — A. ஏரம்பு
S. நாதன் — S. உமாகாந்தன்
W. J. குணரட்ணம் — E. ரட்ணம்
S. கோமஸ — B. ராஜ்குமார்
S. கனகசுந்தரம் — G. சிறிதரன்

● எமது விரிவுரையாளர்கள் வேறு எந்த நிறுவனத்திலும் கடமை புரியமாட்டார்கள்

கொம்பியூட்டர் வகுப்புகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

★ அச்சடித்த பாடக் குறிப்புகளும் வினா விடைகளும் இலவசம்
★ எல்லாப் பரீட்சைகளுக்குமான மாணவர் பதிவுகள் [Student Registration] செய்து கொடுக்கப்படும்

மேலும் விபரங்கட்கு:
HARVARD INSTITUTE
SUCCESSORS OF
Cantabia Institute
(Sister Organisation of Oxonia Institute)
No 21, MAIN STREET
JAFFNA.
(C-5264)



உடனடிவேலைவாய்ப்பு

Kuwait Cleaners - 35K. D
2½ மாதங்கள் ஆகும்
உடன்படிக்கை 2 வருடங்கள்

Vacancies in Saudi Arabia

1. Cleaners - 300 - 350 Riyals (Hospital, Schools, Airport)
2. Masons - 550 Riyals
3. Carpenters - 550 ,,
4. Plumbers - 550 ,,
5. Electricians - 550 ,,
6. Heavy Vehicle Drivers 700 ,,
7. Heavy Mechanics - 650 ,,
8. A/C Mechanics
OPEN VISA
9. Sign Board Painter - 1 - 800 ,,
10. Audio Video Technician - 1 - 800 ,,

★ உடன்படிக்கை 3 வருடங்கள்
★ இலவச உணவும் தங்குமிடமும் அல்லது 100 Riyals அலவுன்ஸ் உணவுக்கு
★ இலவச மருத்துவ சிகிச்சை

Cleaners -கு இருகிழமையில் பயணம். அதாவது 15-06-88 க்கு முன் பயணம் செய்யலாம். ஆதலால் முற்பணம் அவசியம்.

Passport வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

நிபந்தனை:- விசா பெற்றுக் கொடுத்த பின், குறிக்கப்பட்ட காலத்தில பணத்தைச் செலுத்தி வெளிநாடு செல்லத் தவறினால் முற்பணமோ கட்டுச் சீட்டையோ நீங்கள் திரும்பப் பெறமுடியாது செல்ல முடியும் என்றால் வாருங்கள் அல்லது வந்து நேரத்தை வீணாக்காதீர்கள். நம்பிக்கை இருந்தால் வாருங்கள்.

காலை 7 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை

M. Shannmugaratnam
(யாழ் கல்லூரியின் பழைய மாணவன்)
Ex S. I of Police
Sivankovilady, SITHERNKERNY. [N. P]

அல்லது பின்வருவோருடன் தொடர்பு கொள்க:-

1. V. கனகலிங்கம்
7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
2. அமிர்தலிங்கம் மாஸ்டர்
சில்க் மகான், சண்டிலிப்பாய்
3. சிறி Honda)
183, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
4. நோபிட் [ஜோர்ச்]
ராஜா வெல்டிங் வேர்க்ஸ், சங்கானை ரோட், அச்சுவேலி.

இவர்களுடனே பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்



டுபாய்
உடனடி வேலைவாய்ப்புகள்
அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

| | | எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| 1. | சிவில் என்ஜினியர் | 2 | 900 | US$ |
| 2 | மெக்கானிக்கல் என்ஜியர் | 2 | 800 | ,, |
| 3. | எலெற்றிக் என்ஜினியர் | 2 | 900 | ,, |
| 4. | காம்ப் பொஸ் என்ஜினியர் | 2 | 500 | ,, |
| 5. | சிவில் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 6. | மெக்கானிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 7. | எலெற்றிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 8. | தச்சுவேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 9. | கம்பி வேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 10. | கார்மெக்கானிக் | 2 | 350 | ,, |
| 11. | அளவையாளர் | 2 | 400 | ,, |
| 12 | நேரக்கணிப்பாளர் | 3 | 350 | ,, |
| 13. | உதவி நேரக் கணிப்பாளர் | 5 | 300 | ,, |
| 14. | மேசன் (F) | 5 | 275 | ,, |
| 15. | மேசன் [R] | 10 | 250 | ,, |
| 16. | உதவி மேசன் | 15 | 175 | ,, |
| 17 | தச்சுவேலையாளர் [F] | 5 | 275 | ,, |
| 18. | தச்சுவேலையாளர் [R] | 10 | 250 | ,, |
| 19. | உதவி தச்சுவேலையாளன் | 15 | 175 | ,, |
| 20. | லெட் மான் | 10 | 250 | ,, |
| 21. | உதவி லெட் மான் | 15 | 175 | ,, |
| 22 | கம்பி வளைப்போர் | 10 | 250 | ,, |
| 23 | உதவி கம்பி வளைப்போர். | 15 | 175 | ,, |
| 24 | பிளம்பர் | 10 | 250 | ,, |
| 25 | உதவி பிளம்பர் | 15 | 175 | ,, |
| 26 | குளிரூட்டல் டெக்னீசியன் | 5 | 350 | ,, |
| 27 | குளிரூட்டல் சென்றலைஸ் | 10 | 350 | ,, |
| 28. | பெயின்ரர் கட்டடம்) | 10 | 250 | ,, |
| 29 | உதவி பெயின்ரர் | 15 | 175 | ,, |
| 30 | எலெற்ரீஷியன் (வீட்டு | 10 | 275 | ,, |
| 31 | உதவி எலெற்ரீஷியன் | 15 | 200 | ,, |
| 32 | வெல்டர் | 10 | 250 | ,, |
| 33 | உதவி வெல்டர் | 15 | 175 | ,, |
| 34 | தொழிலாளர் | 35 | 175 | ,, |
| 35 | கணக்காளர் | 1 | 400 | ,, |
| 36 | உதவி கணக்காளர் | 1 | 300 | ,, |
| 37. | ஸ்ரோர் கீப்பர் | 1 | 400 | ,, |
| 38 | உதவி ஸ்ரோர் கீப்பர் | 2 | 300 | ,, |
| 39 | கார் பெயின்ரர் | 5 | 300 | ,, |
| 40 | L. V. றைவர் | 7 | 250 | ,, |
| 41 | H. V. றைவர் | 3 | 300 | ,, |
| 42. | H. V. ஒப்பிறேற்ரர் | 5 | 350 | ,, |
| 43. | சமையலாளர் | 2 | 320 | ,, |
| 44 | உதவி சமையலாளர் | 6 | 200 | ,, |
| 45. | கந்தோர் உதவியாளர் | 10 | 200 | ,, |
| 46. | துப்பரவாக்கிகள் [விமானநிலையம்] | 100 | 200 | ,, |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

K. லிங்கம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செல்வம்
நெல்லியான் வீதி.
சுழிபுரம்.

[C 5265]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

கடந்த 22-5-88 அன்று நடந்த எமது திருமண வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கு நன்றியையும் அழைப்பு விடுக்க தவறியவர்களுக்கு மன்னிப்பையும் கோருகின்றோம்.

திரு திருமதி ஸ்ரீ ரெ பாலரஞ்சன்
(4043)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் :
03 05 - 1956

மரணம் :
18 - 05 - 1987

திதி :
05 - 06 - 1988

திருமதி ஜெயந்திதேவி யோகேஸ்வரன்
ஆசிரியை-இளி/உருத்திரபுரம் ம.வித்தியாலயம்]

நெஞ்சிருக்கும் வரை - எம்மனதில்
நிலைத்திருக்கும் - ஜெயந்தியே......
கடமைக்கு சென்றவளை - காலன்
கவர்ந்தனன் - ஆனபிறகும்,
ஆண்டொன்று சென்றாலும்
ஆற முடியுமா உன் நினைவை
பாலர்களிருவரும் - அம்மா
பாடசாலை வரவில்லையென்று......
இன்னும் காத்திருக்க
இதயம் எரிகிறதே - ஜெயந்தி
எங்கு சென்றாய் - ஜெயந்தி
எப்பிறப்பில் உனைநாம் காண்போம்,

உமது பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்
தாய் சகோதரன், சகோதரிகள்
கோப்பாய். (3828)

பாதிக்கப்பட்ட மாணவருக்கான

# விநியோகத்தில் பற்றுக்குறை

## செய்வது அறியாது அதிபர்கள் திகைப்பு

வடமராட்சி, ஜூன் 5

வடமராட்சியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அனுப்பப்பட்ட சீருடைகள், பாடசாலை உபகரணப் பொருட்கள் ஆகியனவற்றில் குறை இருப்பதாகக் கருதப்படுகிறது

பாடசாலைகளில் இருந்து அனுப்பப்பட்ட பாதிக்கப்பட்ட மாணவர் பட்டியலின் படி எந்த ஒரு பாடசாலைக்கும் போதிய நிவாரணம் அனுப்பப்படவில்லையாம்;

குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை அதிபர்கள் செய்வது தெரியாது திகைக்கின்றனர்

இந்தப் பிரச்சனையைத் தீர்க்க நிவாரணத்தைப் பொறுப்பேற்ற ஸ்தாபனங்கள் முன் வரவேண்டும் என்று பெற்றோர்களும், பாடசாலை அதிபர்களும் கோருகின்றனர்.

(இ-160)

### இரத்தினபுரியில் வெள்ளம்

கொழும்பு ஜூன் 5

கடும் மழைகாரணமாக இரத்தினபுரியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

பஸ் நிலையம் மட்டும் 13 அடி நீரில் மூழ்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

### தையல் பயிற்சி

சாவகச்சேரி, ஜூன் 5

சாவகச்சேரி தேசிய இளைஞர் சேவை மன்ற பிராந்திய சம்மேளனம் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவ இருக்கிறது.

### கிணற்றில் விழுந்து மரணம்

கல்வயலில் ஒன்பது வயதுச் சிறுமி குளிக்கும் போது தவறி கிணற்றுள் விழுந்ததால் மரணமானார்

ஸ்ரீ என்பவரே இறந்த சிறுமி ஆவார். [ஓ 31]

## செவ்வாய்க்கிழமையை

# கரி நாளாக

## அனுஷ்டிக்க முடிவு

காங்கேசன்துறை ஜூன் 5

வலி. வடக்கு ஒப்பரேசன் லிபரேசன்'' இடம் பெற்று ஓராண்டு பூர்த்தி அடைவதை ஒட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கரி நாளாக அனுஷ்டிக்க வலி. வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டமொன்று தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சட்டத்தரணி வி. எஸ் கணேசலிங்கம். தலைமையில் நடைபெற்றது

அக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அத்துடன் கடந்த ஆண்டு 'ஒப்பரேஷன் லிபரேஷனால்'' ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் இழப்புகளுக்காக ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளையும் வழிபாடுகளையும் எதிர்வரும் 7 ஆம் திகதி ஒழுங்கு செய்து நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் நிறைவேறிய தீர்மானம் வருமாறு:-

★ இரவு நேர மீன் பிடியைத் தடை செய்ததால் கஷ்டமுறும் மீனவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு கோருதல்,

★ வீடமைப்புக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கு அசம்பாவித காலத்திற்கு வட்டி அறவிடக் கூடாது என வீடமைப்பு அதிகார சபையிடம் கோருதல்,

★ பூஸாவிலிருந்துவிடுதலையானோர், விவசாயிகள், மீனவர்கள் போன்றோருக்கு நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தல்,

★ வலி, வடக்கில் கிராமசேவகர் பிரிவுகள் தோறும் பிரஜைகள்குழுக்களின் புதிய உறுப்பினர் தேர்வுகளை ஆனி 20-ஆம் திகதிக்கு முன் நடத்தி பின்னர் ஒன்றியத்தின் தேர்வுகளை நடத்துதல் [ஒ-68]

### ஜீ ஜீ. யின் சிலை சேதம்

குருநகர் ஜூன் 5

முன்னைநாள் அரசியல்வாதியும் சட்ட மேதையுமான அமரர் ஜீ ஜீ பொன்னம்பலத்தின் திருவுருவச் சிலையின் சிரம் துண்டிக்கப்பட்டுள்ளது

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது

குருநகர் கடற்கரை வீதியில் நிறுவப்பட்டிருந்த சிலையின் தலைப்பகுதியே உடைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கரம் மணிக்கட்டுடன் உடைக்கப்பட்டு பீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. (ஒ 51)

### மேலும் மூன்று புதிய பஸ்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் மூன்று புதிய பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பஸ்கள் அண்மையில் கோண்டாவில் சாலையை வந்தடைந்தன

இத்தகவலை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலை அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த பஸ்களில் ஒன்று கிளிநொச்சி சாலைக்கும், ஒன்று காரைநகர் சாலைக்கும் மற்றையது கோண்டாவில் சாலைக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். [ஒ 9]

### நடுக்காட்டில் பிளாஸ்டிக் படகு

புதுக்குடியிருப்பு, ஜூன் 5

விஸ்வமடுக் காட்டுப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டதெனச் சொல்லப்படும் பிளாஸ்டிக் மீன்பிடிப்படகு ஒன்றை இந்திய அமைதிப் படையினர் கைப்பற்றினர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

வட்டக்கச்சி- கல்மடுப் பாதையில் ஏற்பட்ட கண்ணி வெடித்தாக்குதல்களினால் இந்திய அமைதிப் படையினருக்கு ஏற்பட்ட இழப்பை அடுத்து விஸ்வமடுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது

இளைஞர்கள் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதுடன் தாக்குதல்களுக்கும் ஆளாகினதாகப் புகார் கூறப்பட்டது.

மேலும் இத்தேடுதல் நடவடிக்கையின் போது விஸ்வமடுக் காட்டுக்குள் பிளாஸ்டிக் படகு ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது.

(ஒ-ரி)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு வே. கி. நடராசா

தோற்றம்: 10. 03. 1921 மறைவு: 08. 06. 1985

திதி: 05- 06- 1988

எங்கள் ஐயாவே!

நீங்கள் எங்களை யெல்லாம் விட்டுப் பிரிந்து தனிப் பாதையிலே சென்று ஆண்டுகள் மூன்றானாலும், உங்கள் நியானத்திலும் உங்கள் அன்று நிழ்புகளை நாங்கள் நினைவுகளிலும் சஞ்சரித்துக் கொண்டு நீங்கள் சென்ற பாதையைத் தேடுகின்றோம் ஆனால் இன்னும் எங்களுக்கு அப்பாதை தென்படவில்லை ஐயா!

எனவே இன்றைய தினத்தில் உங்கள் ஆத்ம சாந்திக்கான பூசையையும், மகேஸ்வர பூசையையும், உற்றார் சுற்றத்தார் சூழ கொண்டாடுகின்றோம் ஐயா!

உங்கள் நினைவில் இருக்கும்
அன்பு மனைவி மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

26/28 திருநெல்வேலி,
சிவன் புதுவீதி, யாழ்ப்பாணம். (4360)

## 180 ஆவது நாள் நினைவஞ்சலி



திருமதி தனலட்சுமி இராஜேந்திரராஜா [தனம்]

தோற்றம்:
15-1-1910

அறியாய அழிப்பு
5-12-1987

அன்பின் திருவுருவே பண்பின் உறைவிடமே
பாசத்தின் இருப்பிடமே குடும்பத்தின் குலவிளக்கே
எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத துயில் கொண்ட எங்கள் அன்புத் தாயே!
அமைதிகாக்க வந்து எமது குடும்ப அமைதியைக்
கெடுத்தனரே இன்றுடன் ஆறுமாதம் பூர்த்தியானாலும்
உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
மறையவே மறையாது
தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கணவன்: இராஜேந்திரராஜா
பிள்ளைகள்: ராஜ்குமார், ராஜலட்சுமி
ராஜநாதன், ராஜமனோகரி
மருமக்கள்: சிருபானந்தம், சுமதி
சகோதரர்கள்; மகேந்திரன், பூலோகலட்சுமி

338 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (3441)

## 2 வது ஆண்டு நினைவஞ்சலி



திரு மா. எ வின் கந்தசாமி
(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஊழியர்)

மலர்வு:
27-04 1939
உதிர்வு:
05-06-1986

அன்பின் திருவுருவாய்பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எம் அன்புத்தெய்வமே தங்களை இந்நாளில் அன்புடன் நினைவுகூரும்:

மனைவி பிள்ளைகள்
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
உறவினர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



V. சதாசிவம்
[இளைப்பாறிய சுகாதார பரிசோதகர்]

அன்னையின் மடியில்: 4-2-1922
தரணியின் மடியில்: 5-6-1986
திதி: 13 6-88

நாட்டுக் கொரு நல் மகனை கொடுத்து
விட்டேன் என்று
பெருமையுடன் அவனைப் பின் தொடர்ந்து
மாசம் மூன்றுக்குள் நீங்கள் சென்று
ஆண்டும் இரண்டாச்சே
என்றும் உங்களை நினைவு கூர்ந்து
உங்கள் ஆத்ம சாந்திக்கு
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



சதாசிவம் சிவானந்தமூர்த்தி
(பீட்டர் அண்ணாச்சி)

அன்னையின் மடியில்: 4 5-1953
நயவஞ்சகர் பிடியில்: 11 3-1986

நாடு நலம்பெற ஓடி உழைத்த
உத்தமனே மூர்த்தி
பாடுபட்டும் பலன் காணமுன்னர்
படுபாவிகள் செய்த சூழ்ச்சியினால்
பாலவயதினில் சென்ற பாதி வழியினில்
பாதகரால் நீ அழிந்தாயோ
உங்களை நினைத்துருகும்
தாய், சகோதரர்கள்,
மருமக்கள்

சிவபதி,
வதிரி, கரவெட்டி. (4032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

**பொருள்:**

இயலுமிடத்தில் எல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது; இயலவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்ய வேண்டும்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல-298/1 கஸ்தூரியார் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 23173
05-06-1988 த.பெ.-இல.

# வேண்டாம் அந்த வழி!

வடக்கு கிழக்கில் இப்போது தேடுதல், சுற்றிவளைப்பு, திடீர் ஊரடங்கு என்பன நாளாந்த நிகழ்ச்சிகளாகி விட்டன. இந்த நிகழ்ச்சிகள் என்றால் மக்களுக்குத் தொல்லை, அவர்களைத் துன்புறுத்துதல் என்பன நேர்முக விளைவுகள் ஆகிவிட்டன.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடந்த சம்பவங்களைக் கேள்வியுறும் போது, மக்களைத் துன்புறுத்தும் நோக்கம் அமைதிப் படையினர் மத்தியில் மேலிட்ட நிலைக்கு வருகிறதா என்ற சந்தேகம் வலுக்கவே செய்கிறது.

1987 அக்டோபர் மாதம் தொடக்கம் டிசம்பர் வரையான காலத்தில் நடந்து கொண்ட அதே பாணியில் அமைதிப் படை ஜவான்கள் மீண்டும் ஆக்ரோஷமாக நடக்க முற்படுகிறார்கள் என்ற அச்சமும் மக்கள் மத்தியில் பரவி வருகிறது.

மக்கள் மனங்களை வெல்ல வேண்டும். அவர்கள் ஊடாகப் போராளிகள், மனங்களை வெல்ல வேண்டும், அதன் மூலம் தாம் ஆற்ற வந்த முக்கிய பணியான அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கம் தமக்கு இருப்பதாக அமைதிப்படை அதிகாரிகளும், இந்திய அரசாங்கத்தினரும் கூறி வந்தனர்.

கீழ் மட்டத்திலுள்ள ஜவான்களின் ஆக்ரோஷப் போக்கையும், மக்களைத் துன்புறுத்தும் நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது, கேள்வியுறும் போது முந்திய நோக்கம் வேறு விதமாக மாற்றப்பட்டு விட்டதா எனக் கேட்கத் தோன்றுகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கமும், அதன் அரச படைகளும் கடைப்பிடித்த உத்தியைத் தான் இந்தியாவும் கடைப்பிடிக்க முனைகிறதா?

அதாவது மக்களைத் துன்புறுத்துவதன் மூலம், அரசியல் போராட்டத்தில் அவர்களை வெறுப்படையச் செய்து, திசைதிருப்பித் தாம் நினைத்ததைச் செய்விக்கலாம் என்று ஜே. ஆரும், லலித்தும் நினைத்தார்கள். அது முடியவில்லை. போராளிகளை அழிப்பதாகக் கூறி மக்களை அழிக்க முடிந்ததே தவிர, வேறு எதையும் அவர்களால் ஈட்ட முடியவில்லை.

அதே உத்தியை இந்தியாவும் கையாள நினைத்தால் அது நிச்சயமாகத் தவறுவிடப் போகிறது என்பதை இப்போதே சொல்லி வைக்க விரும்புகிறோம். அமைதி காப்பதற்கு என்று வந்தவர்கள் மக்களை அழித்தார்கள் என்ற அவப்பெயரை இந்தியா உலக அரங்கில் தேடிக்கொள்ள நேரிடும்.

ஸ்ரீலங்காவின் நோக்கம் இந்தியாவுக்கு இல்லை என்று நிருபிக்கவேண்டுமெனில் —

தேடுதல், சுற்றிவளைப்பு என்றால் மக்களைத் துன்புறுத்துதல் என்ற நிலைப்பாடு இருப்பதால் அவற்றைத் தவிர்க்கவேண்டியது அவசியமாகிறது.

அதாவது மேற்சொன்ன இராணுவ நிகழ்ச்சிகளை நீக்குவதற்கு யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு அல்லது இணக்கம் என்பன அவசியம்.

அவற்றை அடைவதிலேயே, எய்துவதிலேயே இந்தியா இப்போது கவனம் செலுத்த வேண்டும் அதனையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஸ்ரீலங்கா அரசு கையாண்ட அதே வழிமுறையை இந்தியாவும் கடைப்பிடித்தால், இந்தியா என்ற மூன்றாவது அம்சம் சேர்ந்தபோதிலும் இனப்பிரச்சினை நீடித்துத் தாம் இறந்தொழியவும், அரசியல் அடிமைகளாக வாழவுமே நேரிடும் என்று தமிழ் மக்கள் கருதவேண்டியதாகிவிடும்.

# இறந்தவர்களின் உடைமைகள்

## உறவினரிடம் ஒப்படைப்பு

கடந்த அக்டோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது யாழ். ஆஸ்பத்திரியில் இறந்தவர்களின் சடலங்களிலிருந்து கழற்றப்பட்ட உடைமைகள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் கோட்டை அமைதிப் படை முகாமில் வைக்கப்பட்டிருந்த இவ்வுடைமைகள் கடந்த வாரம் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு. நச்சினார்க்கினியனிடம் ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே.

இப்பொருள்களில் இரண்டு தங்கமோதிரங்களும், இரண்டு கைக்கடிகாரங்களும் முக்கியமானவை. இவற்றுடன் பல அடையாள அட்டைகளும், சிறு தொகைப் பணமும் அடங்கும். (ஒ-5)

# உலகில் எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கை ஒரு கோடியாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் தகவல்

ஜெனிவா, ஜூன் 4
உலகில் எய்ட்ஸ் நோயாளர் தொகை 50 லட்சத்துக்கும் ஒரு கோடிக்கும் இடையில் இருக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் தான் எய்ட்ஸ் நோய் அதிகமாகப் பரவி வருகின்றது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

ஆபிரிக்க நாட்டில் 5 இல் ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் பிடிக்கும் அபாயம் நிலவுவதாகத் தெரிவிக்கப் பட்டது. கடந்த ஒரு மாத காலத்தில் எய்ட்ஸ் நோயால் பீடிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இது உலக சுகாதார ஸ்தாபனத்துக்குக் கவலை அளித்துள்ளது.

இதனால் எய்ட்ஸ் பற்றிய பிரசாரங்களை தீவிரமாக்கும்படி உலக நாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுள்ளது. (எ)

**ஈகுவடோர்**

### விமான விபத்து ஒன்றில் விமானப்படைத் தளபதி உட்பட 10 பேர் பலி

ஈகுவடோர், ஜூன் 4
ஈகுவடோர் விமானப் படைத் தளபதி, விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார்.

அவர் சென்ற விமானம் மலை ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

அவருடன் சென்ற இரண்டு இராணுவ அதிகாரிகள், இஸ்ரவேல் பாதுகாப்பு அதிகாரி உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

விபத்துக்கான காரணம் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் பலஸ்தீனியர் பொது வேலை நிறுத்தம்

ஜெருசலம், ஜூன் 4
அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஷுல்ட்ஸின் மத்தியகிழக்கு விஜயத்தை எதிர்த்து ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசத்தில் பலஸ்தீனியர்கள் மூன்று நாள் பொது வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர்.

பலஸ்தீனியர் பெரும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர். அப்போது இஸ்ரவேலிய இராணுவ வீரர் சுட்டனர் அதில் இரண்டு பலஸ்தீனிய இளைஞர் உயிரிழந்தனர். இன்னொரு பலஸ்தீனிய இளைஞரை, யூதக் குடியிருப்பாளர் ஒருவர் அடித்துக் கொலை செய்தார்.

திரு ஷுல்ட்ஸ் நேற்று கெய்ரோ சென்றார். ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குடன் பேச்சுக்களை நடத்தி விட்டு அம்மான் சென்று ஜோர்தான் மன்னர் ஹுசேனுடன் பேச்சு நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னரே திரு. ஷுல்ட்ஸ் சிரியாவுக்கும் இஸ்ரவேலுக்கும் விஜயம் செய்வார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

### குண்டு வெடித்து 4 பேர் பலி!

ஜோஹன்னஸ்பர்க்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

கடந்த 9 தினங்களில் நகரப்புறத்தில் இடம் பெற்ற ஐந்தாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும்.

## வெளி உலகில்

**பஞ்சாப்:**

# பொற்கோயிலைச் சுற்றி வீடுகள், கடைகள் இடிக்கப்படுகின்றன

புதுடில்லி, ஜூன் 4
பஞ்சாப்பில் பொற்கோயிலைச் சுற்றியுள்ள வீடுகள், கடைகளை அகற்றும் வேலையை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.

பொற்கோயில் சீக்கிய தீவிரவாதிகளின் கைகளுக்குள் சிக்கிவிடக் கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதனிடையில் பொற்கோயில் சுத்தம் செய்யும்போது மீட்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது என்று அறிவிக்கப் பட்டது.

உடைக்கப்படும் வீடுகள் மற்றும் கடைகளுக்கும் போதிய நட்டஈடு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. (எ)

### 57 ஆக உயர்வு

பொன், ஜூன் 4
மேற்கு ஜேர்மனியில் தங்கச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்தது.

விபத்து நடந்த சமயம் சுரங்கத்தினுள் இருந்த எவரும் உயிர் தப்பவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது [ஒ-எ]

### கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதலில் 65 சிப்பாய்கள் பலி!

அங்கோலாவில் யுனிடா கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய தாக்குதலில் 65 அரசுச் சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கெரில்லாக்கள் அண்மையில் நடத்திய பெரிய தாக்குதல்களில் இதுவும் ஒன்று என தெரிவிக்கப்படுகின்றது. (எ)

**மத்திய கிழக்குப் பிரச்சினை;**

# அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மீண்டும் தூது செல்கிறார்

வாஷிங்டன், ஜூன் 4
மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு மீண்டும் சமாதானத் தீர்வு காணும் முயற்சியை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் ஆரம்பித்துள்ளார்.

நேற்று அவர் மத்திய கிழக்குப் பயணத்தைத் தொடக்கினார்.

இம்முறை பலஸ்தீனியர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

திரு ஷுல்ட்ஸ் ஏற்கனவே இரண்டுமுறை மத்திய கிழக்கு நாடுகளுக்கு சமாதானத் தூது சென்றார். அது தோல்வியில் முடிவடைந்தது தெரிந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களைத் திருப்பி ஒப்படைப்பதன் மூலம் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற நிலையை அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது. (எ)

# சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு மாநாடு ஜூன் 28 இல்!

மாஸ்கோ, ஜூன் 4
சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் விசேட மாநாட்டில் கலந்து கொள்ளும் 319 பிரதிநிதிகளை கட்சியின் பொலிற்பீரோ நேற்றுத் தெரிவு செய்தது.

சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்ப்பச்சேவ்வும் அவரின் தீவிர ஆதரவாளர்களான ஜனாதிபதி குரோமிக்கோ பிரதமர் ரிஸ்கோ, செப்ரிகோவ் உட்பட ஆறு பேர் இப்பிரதிநிதிகளில் அடங்குவர்.

திரு கோர்ப்பச்சேவின் சீர்திருத்தக் கொள்கையை ஆதரிக்கும் மாவட்டக் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு இக்குழுவில் இடமளிக்கப்படவில்லை.

சோவியத் யூனியனின் 41 வருட காலச் சரித்திரத்தில் கட்சியின் சிறப்பு மாநாடு ஒன்று நடத்தப்படுவது இதுவே முதல் தடவை.

இம்மாதம் 28 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சிறப்பு மாநாட்டில் 6,000 டெலிகேட்டுக்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (எ)

# தமிழர் தியாகத் திருநாள் ஜூன் 5

ஈழத்தமிழரின் வரலாற்றில் ஜூன் 5 ஆம் திகதி ஒரு மகத்தான தியாகத்திருநாள் ஆகும்.

இலங்கைத் தேசியத்தில் பற்றுக் கொண்டு செயலாற்றிய தொழிற்சங்கவாதி தோழர் கந்தசாமி அகாலமரணமடைந்தது 1947 ஜூன் 5 இல்.

ஒற்றையாட்சியில் பெரும்பான்மை இனத்துடன் ஒன்றுபட்டு சம நிலையில் வாழலாம் என நம்பிய தமிழினம் சிங்களம் மட்டும் சட்டத்தின் மூலம் ஏமாற்றப்பட்டது 1956, ஜூன் 5 இல்.

தம்பி சிவகுமாரன் தீவிரவாதியாகிப் போராடி எதிரியிடம் சிக்கிச் சீரழியாமல் தமிழ் மண்ணுக்காக தன்னுயிரை மாய்த்தது 1974 ஜூன் 5 இல்.

இதைவிட முல்லேரியா கோவிந்தனும், டெவன் தோட்டத்து சிவனு லெட்சுமணனும், ஐயாவும், மலையகப் போராட்டத்திலும்—

திருமலை நடராசன் திருமலையிலும்—

நல்லூரிலே தம்பி திலீபனும்- மட்டக்களப்பில அன்னை பூபதியும் செய்த தியாக வரலாறு தொடர்ந்து கொண்டே போகிறது.

கொலன்னாவைச் சந்தியில் கந்தசாமியின் நினைவுச் சிலை பேரினவாதிகளால் அடித்து நொருக்கப்பட்டது ஜூன் 5 இல்.

காலிமுகச் சத்தியாக்கிரகத்தின் போது ஆட்சியாளரும், பாதுகாப்புப்படைகளும் பார்த்து நிற்க சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதும், இனக்கலவரம் பரவியதும் ஜூன் 5 இல்.

அன்று தொடங்கிய போராட்டங்கள் இன்னும் ஓயவில்லை- தமிழனின் வாழ்வும் மாற்றமடையவில்லை. தமிழனின் இன்றைய அவல நிலையை உணர்த்துவது போல் தம்பி சிவகுமாரன் சிலையும் உருக்குலைந்தாய் சந்தியில் தலை கீழாய் தொங்கிக் கொண்டிருக்கிறது.

அன்று தொட்டு இன்று வரை தமிழரைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் 'ஜூன் 5 தான்' ஒவ்வொரு மணித்துளியும் எங்கேயாவது ஓரிடத்தில் தியாக வரலாறு தீட்டப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

அன்று 1956 ஜூன் 5 இல் தந்தை செல்வநாயகம் இலங்கை நாடாளுமன்றத்தின் படிக்கட்டுகளிலே தொடக்கி வைத்த அறப்போர் [illegible] செல்லப்பட்டு சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்து நிற்கிறது.

இன்று எமக்கு ஓர் புனிதமான தியாகத் திருநாள். வரலாறு படைப்பதற்காக தம்வாழ்வையே சுதந்திர தேவியின் பலிபீடத்தில் தியாகம் செய்த அந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செய்வோம். (இ)

**ஊரெழு க. முத்துக்குமாரசாமி**

**மட்டக்களப்பு**

# நாவற்குடா பகுதியில் பலத்த தேடுதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 5
மட்டக்களப்புப் பகுதியில் தன்னாமுனை, நாவற்குடா பகுதியில் கடந்த புதன்கிழமை பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை அந்தப் பகுதியில் கேட்ட பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை அடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்தத் தேடுதலின் காரணமாக குறிப்பிட்ட பகுதிகள் நூற்றுக்கணக்கான அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பகுதிகளில் இருந்து எவரும் வெளியேறவோ உட்செல்லவோ அனுமதிக்கப்படவில்லை.

இதேவேளையில் இந்த பகுதிகளில் இடையிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் [illegible] கூறுகிறது. (இ-9)

### வெளிறல் நோய்

கோப்பாய், ஜூன் 5
தற்போது வெண்டியில் வெளிறல் நோய் பரவிவருவதால் வெண்டி பயிரிடுவோர் பெரிதும் நஷ்டம் அடைந்துள்ளனர். (இ-72)

### பஸ்தரிப்பு

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஹெலித்தாக்குதலுக்குப் பலியான சவரிமுத்து யேசுதாஸின் (வயது 24) ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பு நிலையம் ஒன்று மண்டைதீவு பீச் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ளது (இ-88)

# வவுனியாவுக்கு யுனிசெப் உதவி

வவுனியா, ஜூன் 5
வவுனியா மாவட்டத்தின் வைத்திய சேவையின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நிவாரண உதவியாக யுனிசெப் நிறுவனம் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள், உபகரணங்கள் என்பவற்றை வழங்கி உள்ளது.

டென்மார்க்கிலிருந்து நேரடியாக விமானம் மூலம் வைத்திய நிவாரண உதவியாக கொழும்புக்கு வந்து சேர்ந்த 7 பெட்டிகளில் இப் பொருள்கள் வவுனியாவுக்கு வந்து சேர்ந்தன;

வவுனியா அரசாங்க அதிபர் திரு கே. சி. லோகேஸ்வரனின் முயற்சியாலும் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற நிவாரணம் தொடர்பான கூட்டம் ஒன்றில் விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் அடுத்தே இவ்வுதவிப் பொருள்கள் வந்து சேர்ந்தன என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். எஸ். வசந்தநாதன் தெரிவித்தார் [சி-64]

### பதவி உயர்வும் இடமாற்றமும்

பருத்தித்துறை, ஜூன் 5
வல்வெட்டித்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் திரு எஸ். ஏ. துரைசிங்கம் சுகாதார அமைச்சினால் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையாளராகப் பதவி உயர்த்தப்பட்டு கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-118)

### உர வகைகள்

அராலி, ஜூன் 5
அராலி கிராம மக்களின் நலன் கருதி அராலியில் அமைக்கப்பட்டுள்ள உரக்களஞ்சியத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள் கிருமிநாசனி வகைகள் விலை இனங்கள் போன்றவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (இ-12)

# இளைஞரின் ஆர்வம் வரவேற்கத்தக்கது

## கலாசாரப் போட்டியில் உரை

கோப்பாய், ஜூன் 5
இளைஞர் கழகங்கள் ஒன்று சேர்ந்து நடத்திய இக்கலாசாரப் போட்டியில் இவ்வளவு இளைஞர்கள், யுவதிகள் பங்குபற்றியதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர்களின் ஆர்வம் வரவேற்கத்தக்கது.

கோப்பாய் தொகுதி இளைஞர் கழகங்களிடையே நடைபெற்ற கலாசாரப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா மேற்கண்டவாறு கூறினார்.

கலாசாரப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றன.

கோப்பாய் தொகுதியைச்சேர்ந்த ஆறுக்கும் மேற்பட்ட கழகங்கள் இதில் கலந்து கொண்டன.

கோப்பாய் தொகுதி உதவி இளைஞர் சேவை அதிகாரி செல்வி கலாமதி தர்மலிங்கம், க. கணபதிப்பிள்ளை (சிவனமணி) ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா சான்றிதழ்கள் வழங்கினார்.

தனி பாடல் (குழு) மிருதங்கம், கிராமியப் பாடல், வயலின் ஆகிய துறைகளில் கோப்பாய் வடக்கு இளைஞர் கழகம் முதலிடத்தை பெற்றுக் கொண்டது.

நாடகப் போட்டியில் அச்சுவேலி, இந்திரா மன்றமும். வில்லுப் பாட்டுப் போட்டியில், இருபாலை பாரதி கலா மன்றமும் முதலிடத்தை பெற்றுக்கொண்டன. (இ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங், சூட்டிங்ஸ்
குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்

# உதயன்

5 - 6 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி
பெனாரஸ்
காஞ்சிபுர
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

## இரட்சகர் என...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) திய கடிதத்திலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

இந்த அமைப்பில் 51 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

அந்த நாடுகளின் தலைவர்களுக்கு திரு.வே பிரபாகரன் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

(இக்கடிதத்தின் சுருக்கம் ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.)

கடிதத்தில் முழு விவரம் வருமாறு:

இந்திய அமைதிப்படை தமிழருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே இலங்கைக்கு அனுப்பப்பட்டது

ஆனால் அது 'ஆக்கிரமிப்பு இராணுவம் போல் செயற்பட்டுவருகிறது.

விடுதலைப் புலிகள் மீதும் ஈழத் தமிழர் மீதும் இந்திய இராணுவம் இரத்த வெறி பிடித்த யுத்தம் நடத்தி வருகிறது

இந்திய-இலங்கை ஒப்பந்தம், ஈழத்தில் அமைதியும், தமிழ மக்களுக்கு நீதியும் கிடைக்க ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் இன்னும் தமிழர் தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்துவருகின்றனர்,

எனவே நீங்கள் இந்திய அரசின் நீதியற்ற, அநியாயமான, ஜனநாயகத்துக்கு விரோதமான நிலையைக் கைவிடுமாறு வற்புறுத்துங்கள்

ஈழத்தில இராணுவ நடவடிக்கையை விட்டுவிட்டுப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும்

இதற்கு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யுமாறு பிரதமர் ர ஜீவ் காந்தியை வற்புறுத்துங்கள்.

—இப்படி திரு பிரபாகரன் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். (உ-எ)

## ஜெனியன்ஸ் வெற்றி

பிள்ளையார் சுற்றுக்கிண்ண கிரிக்கெட்போட்டியின் அரை இறுதியாட்டத்தில் யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக ''சிவப்பு'' அணி வெற்றி பெற்றது

'ஷரு'' கிரிக்கெட் அணியை இந்த அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில வென்றது.

# செத்துக் கொண்டிருக்கும் ஈழத்தமிழினத்தைக் காப்பாற்றுக!

## கருணாநிதி அழைப்பு

ஹைதராபாத். ஜூன் 5

செத்துக்கொண்டிருக்கும் ஈழத்தமிழினத்தைக் காப்பாற்ற முன் வாருங்கள். இவ்வாறு அகில இந்திய அரசியல் தலைவர்களுக்கு தி.மு.க தலைவர் கலைஞர் மு கருணாநிதி அழைப்பு விடுத்தார்

ஹைதராபாத்தில் நடந்த தெலுங்குதேசம் கட்சியின் மாநாட்டில் திரு கருணாநிதி அண்மையில் சிறப்புரை ஆற்றினர்.

அப்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்

மாநாட்டில் திரு கருணாநிதி தமிழில் பேசினார். அதனை முன்னாள் எம். எல். சி திரு இளமந்தா தெலுங்கில் மொழிபெயர்த்தார்

திரு கருணாநிதி பேசியதாவது:-

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்டு 1,700 கிலோமீட்டர் தூரம் ரயிலிலும், காரிலும் பயணம் செய்து மாலையில் வந்துசேர்ந்திருக்கிறேன்.

காரணம் என் ரி ராமராவ் அவர்களை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக நான் அழைத்த போது —

மதுரையில் நடந்த 'டெசோ' மாநாட்டிற்கும்,

சென்னை மாநாட்டுக்கும் வந்து இலங்கைத் தமிழருக்காகக் குரல் கொடுத்த சகோதரர் ராமராவ்.

இலங்கைத் தீவுக்கு இராணுவத்தை அனுப்புங்கள என்று தி மு க. கேட்டது உண்மை.

### கொல்வதற்கு அனுப்புமாறு கேட்டதில்லை

அங்கே உள்ள தமிழர்களைக் கொல்வதற்காக இராணுவத்தை அனுப்புங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை

அங்கே உள்ள பிரபாகரனைச் சுற்றி வளைக்க 20 ஆயிரம் இந்திய வீரர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றும் —

எந்த நேரத்திலும் பிரபாகரன் பிடிக்கப்படலாம் அல்லது கொல்லப்படலாம் என்றும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இங்கே அமர்ந்து இருக்கும் இந்தியத்தலைவர்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிரபாகரனைக் காப்பாற்ற, இலங்கையிலே உள்ள தமிழர்களைக் காப்பாற்ற, முன்வாருங்கள் என்று அழைக்கின்றேன.

மீண்டும் உங்களை எல்லாம் அழைக்கின்றேன்.

இலங்கையிலே செத்துகொண்டு இருக்கிற தமிழினத்தைக் காப்பாற்ற தி மு கவின் அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று இங்கே வீற்றிருக்கிற எல்லாத் தலைவர்களையும் திரு ராமராவையும் நான் அழைக்கின்றேன்.

— இவ்வாறு திரு. கருணாநிதி பேசினர்

(ஒ-7)

# வடமராட்சியில் கடைகளைத் திறக்க முடியாத நிலை

வடமராட்சி ஜூன் 5

வடமராட்சிப் பகுதியில் கடைகளையும், சந்தைகளையும் திறந்து வியாபாரம் மேற்கொள்ளுவதற்கு அமைதிப்படையினர் தடைவிதித்து வருகின்றனர் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

பருத்தித்துறை. புலோலி, நெல்லியடி, வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் கடைகளோ, சந்தைகளோ எதுவும் நேற்று முன்தினம் முதல் திறக்க அமைதிப்படையினரால் அனுமதிக்கப்படவில்லை

ஏனைய கடைகளைத் திறந்த பலர் பலமாகத் தாக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஐந்து நாட்களுக்கு கடைகளைத் திறக்க வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

அண்மைக்காலங்களில் நடந்த ஹர்த்தால் நடவடிக்கைகளுக்கு பழிவாங்கும் செயலாக இது இருக்கலாம் எனப் பலரும் பேசிக்கொள்கின்றனர் (ஒ-160-9)

## ஈரோஸின்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி) ருந்து தொடர்ந்து ஸ்ரீலங்கா கூலிப்படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை கண்டித்த இந்திய அரசு, பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி வந்தது. ஆனால் இந்தியத் தரப்பினரும் ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் அதே நடவடிக்கைகளைத் தொடர்வதான து ஸ்ரீலங்கா கூலிப்படையினரைப் போன்றதாகவே இந்தியப் படையினரையும் எண்ணத் தோன்றியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினரால் தொடரப்பட் அநியாயமான சிங்களக் குடியேற்றங்கள் எவ்வித தடங்கல்களுமின்றி வெலிஓயா, கந்தளாய், அம்பாறை மாவட்டப் பகுதிகள் போன்ற தமிழ்பேசும் மக்களது பிரதேசங்களில் தொடர்ந்த வண்ணமுள்ளன.

எமது சொந்த வளங்களில் தொழில் புரிந்து வரும் மீனவர் கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளால் மிகவும் நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். பொது ஸ்தாபனங்களிலும், விவசாயிகள், மற்றும் சகல தொழில்களிலும் ஈடுபட்டுவருவோர் திடீர் திடீரென நடைபெறும் தேடுதல் நடவடிக்கை, ஊரடங்கு நடவடிக்கைகளால் பெரிதும் சிரமங்களுக்குள்ளாகி பொருளாதார ரீதியில் பின்தள்ளப்பட்டுள்ளனர்.

### இந்தியாவும் இசைவா?

வடக்கு கிழக்கில் புனரமைப்பு என்ற போர்வையில் வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்து வரும் நிதியை ஸ்ரீலங்கா அரசினர்தமது இஷ்டப்படி சிங்களக்குடியேற்றங்களின் வளர்ச்சிக்கும் தெற்கு பகுதியினரின் மேம்பாட்டிற்கும் பயன்படுத்தக் கூடியதாக தமிழ்பேசும் மக்களது பிரதேசங்களை தொடர்ந்தும் யுத்தப் பிரதேசங்களாகவே பேணியவண்ணம் கபட நாடகமாடுகிறது இதற்கு இந்திய அரசு தரப்பினர் இசைந்து போவதாக தமிழ்பேசும் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் காலம் வரவேண்டும் எம்மைத் தொடர்ந்தும் அவமதிக்கும் நிலை மாற வேண்டும். தமிழ்பேசும் மக்களது விருப்பம் உலகெங்கும் தெரியவேண்டும்.

எனவே—

★ உடனடியாக யுத்த நிறுத்தம் அமுலாக்க வேண்டும்

★ தொடர்ந்து மக்களது நன்மைகருதிய பேச்சுவார்த்தை தொடரப்பட்டு முடிவு ஏற்பட வேண்டும்

இந்தக்கோரிக்கையை முன்வைத்து எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாளை 06-06-88 அன்று யாழ்குடா நாட்டில் அடையாளமாக ஆரம்பிக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேலும் தொடரப்படும்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிழக்கை....

[1ம் பக்கத் தொடர்ச்சி] என்பதே எமது கருத்து கிழக்கிலங்கையுடன் ஒப்பிடும்போது உங்களுக்கு உள்ளதெல்லாம் உரிமைப் பிரச்சினையேயாகும்,

ஆனால கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் நிலை முழுக்க முழுக்க இனப்பிரச்சினையைத் தழுவியதே நாளுக்கு நாள் கிழக்குப்பகுதியில் பேரினவாதிகளின் ஊடுருவல் அதிகரித்துவருகிறது

3 839 சதுரமைல் விஸ்திரணமுள்ள கிழக்கு மாகாணம் அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, என 3 நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது

இதில் அம்பாறைத் தொகுதியானது மொத்தம் 1.775 சதுரமைல் விஸ்தீரணமானது. இந்த இடப்பரப்பில் அம்பாறைத் தொகுதியில் 900 சதுர மைல்களிலும் பொத்துவில் தொகுதியின் தமணலவு கல ஆகிய பகுதிகளில் 505 சதுரமைல்களிலுமாக 1405 சதுமைல்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் மிகுதி 770 சதுர மைல் பரப்பிலேயே தமிழர்கள் உள்ளனர்

இதன் காரணமாக அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதி சிங்களப் பிரதேசமாக மாறிவிட்டது.

அடுத்து திருகோணமலை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 1.048 சதுரமைல் மொத்த நிலப்பரப்பில் சேருவில சிங்களத் தொகுதிக்கு 700 சதுர மைல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன, மிகுதி348 சதுர மைல் பரப்பளவே திருமலை. மூதூர் ஆகிய தமிழர் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகத் தமிழ் பேசும் மக்களின் பகுதிகள் அங்கு நாளுக்கு நாள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் புனித பிரதேசங்கள் தோற்றுவிக்கப் பட்டு வருகின்றன.

இந்நிலை தொடருமானால் வெகு விரைவில் கிழக்கும் சிங்கள மக்களின் 8 ஆவது மாகாணமாக மாறிவிடும்.

கிழக்கு மாகாணத்தைக் காப்பாற்ற வடபகுதியினர் முன்வர வேண்டும் வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களிலேயே இதுவரை கிழக்குப் பகுதியும் காப்பாற்றப் பட்டு வந்தது எனவே வடபகுதியினர் இது விடயத்தில் கவனமெடுத்து செயல்பட வேண்டும்

இவ்வாறு அவர் தெரிவித்தார். [அ-9-10]

## திருத்த,,,:

[1-ம் பக்கத் தொடர்சி] நேற்று ஆரம்பமாகின அது அநேகமாக முடிந்து விட்டதாம், மேலும் சிறு அளவிலான திருத்தங்களே மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் மின்சார சபை அதிகாரி ஒருவர் நேற்று மாலை தகவல் தந்தார்.

திருத்தவேலைகள்பூரணமாக முடிவடையும் பட்சத்தில் இன்று மின்சார விநியோகம் கிடைக்கக் கூடும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார் (ஒ-9)

## சலாமின் --

[1-ம் பக்கத் தொடர்ச்சி] திலுர்கள்

பின் மாலை 5 30 மணியளவில் இமையவனின் அவரின் இல்லத்துக்கு அண்மையில் உள்ள மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்ட பின்னர் மாலை 6 00 மணியளவில் இமையவன் லையாட்டரங்கில் அடக்கப்பட்ட [illegible] (இ-160)

## வேட்பாளர்....

அறிவிக்கப்படுகிறது

ஏ ஜி. குமரத்துரை என்ற அந்த வேட்பாளரின் வயது 78

கடந்த திங்கள் இரவு கம்பஹாவில் ஐ. சே. அணி வேட்பாளர் ஒருவர் மாரடைப்பினால் மரணமானார் என்பது தெரிந்ததே. [ஒ-எ]

## மூன்றும் மாத நினைவஞ்சலி



தோற்றுகை
12- 6- 1968

மாற்றுகை
31- 1- 1988

திதி
5- 6- 88

### திரு. க. ரவிச்சந்திரன் [ரவியன்]

காரிருளில் நட்டம் பயிலும் துருவ நட்சத்திரம்! கூர்மையான அதன் ஒளிப்பிளம்புகள் ஈழவிடுதலைக்கோர் எழுச்சிப் பரணி! மீண்டும் மூடுகின்ற காரிருள் சுதந்திரப்பறவை வடிவிற்குது! அடி வருடிகள் கூட சமநீதியினால் தோல்வியே கண்டனர். எவ்வகையிலும் மரணம் சாதனையின் அரும்பு உடம்பினால் எதையடா சாதிக்க முடியும்? கோழைகளுக்கு அதுவியாபாரம்! தியாக வேங்கைகளின் வீர வரலாறுகள் அருதை வடிவமல்ல அரசினை பார்க்கும் கருவிகள் தேசபக்தனே நின்நேசமே அஞ்சலி

வரலாற்றின் ஏடு
உடல் காணு உள்ளங்கள்
[தாய் மாமன்]

பிள்ளையார் கோவிலடி,
கட்டுவன். (4044)

## மரண அறிவித்தல்கள்

### K. SIVAHARAN - (Fisheries Inspector)

சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. K சிவகரன் (மீன்பிடி இலாகா இன்ஸ்பெக்டர்) 3 6-88 இல் காலமானார். அன்னார் முன்னை நாள் பட்டினசபைத் தலைவர் காலஞ்சென்ற திரு செ. கயிலாசபிள்ளையினதும் திருமதி கண்மணியினதும் அன்பு மகனும் லலிதாமணியின் அன்புக்கணவரும் டினேஸ் கதன். நிறஞ்சனி, தர்சினி, சுரேஸ். பிரதீபா ஆகியோரின் அன்புத்தந்தையும், சி பூஷணம், சிவநாயகி, சிவாநந்தன், சிவசோதி சிவகாமசுந்தரி, சிவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திரு வீ சுப்பிரமணியத்தினதும் திருமதி த கரத்தினதும் மருமகனும், பாலகிருஷ்ணர், அரியராஜா, காசிநாதன், குணசேகர், சிவபோகராஜன், ராயினி, பாரதாமணி ஆகியோரின் மைத்துனருமாவார், அன்னாரின் ஈமக்கிரிகைகள் 5 6-88 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு கயிலாசபிள்ளை வீதி, கச்சாய் றோட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
V. T. ஐயாத்துரை
(4103)

### தொம்மைப்பிள்ளை - சவிரிமுத்து

இவர் முன்னாள் கரவெட்டி புனித இருதயக் கல்லூரியினதும், பளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியரும், பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், பச்சிலைப்பள்ளி முன்னாள் விளையாட்டுத்துறை உத்தியோகத்தரும், தாளையடி மீன்பிடிச் சங்க முன்னாள் பொது முகாமையாளரும் ஆவார். இவர் திருமதி தொம்மைப்பிள்ளை-மேரிப்பிள்ளையின் அன்பு மகனும் போயிட்டி இளவாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், பார்பராவின் அன்புக்கணவரும் மேரிவுளோறு, லோறன்ஸ், வுளோறன்ஸ், மேரி வுளோறட் (ப நோ, கூ. சங்க கிளை முகாமையாளர் செம்பியன்பற்று). வுளோறிடா (கச்சேரி யாழ்ப்பாணம்) கிளறன்ஸ் (இந்தியா), வுளோறினா (திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்). ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவர் கயித்தாம்பிள்ளை - மரியநாயகம் (பளை மகா வித்தியாலயம்), அந்தோனிப்பிள்ளை - அன்ரன் - ஜெயகுமார் (பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், திருமதி பூமணி அருளானந்தம். திரு தொம்மைப்பிள்ளை - சிங்கராயர் (இலங்கை வங்கி ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06-06-1988 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து தாளையடி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்.
தாளையடி (4104)

★ LONDON EXAMS ★
[Nov. Dec. 88]
WEEKEND CLASS
ஆரம்பம் : 8.6.88 காலை 9.00
I C.M.A — C I M A.
Stage I & II
A A. T. — Prelim, & Inter.
விரிவுரையாளர் குழு:
V. கருணாநிதி, S P சிவஞானம்,
S சிவபாலன், S பிலிப்,
Mrs S மூர்த்தி மற்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள்.
இது விளம்பரமல்ல!
அப்படியாயின் விளம்பரம் யாது???
எமது மாணவர்களின் கடந்த காலப் பரீட்சைப் பெறுபேறுகள் மாத்திரமே
GOOD WINE NEEDS NO BUSH
RAPID RESULTS INSTITUTE
212. கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[3449]

சிறந்த தேயிலை
High Grown Tea
சில்லறையாகவும் மொத்தமாகவும்
அதி உன்னத சுவை!
அதிக சாயம் கொண்ட தேயிலை விற்பனைக்குண்டு.
வியாபாரிகளுக்கு கூடிய சலுகை கொடுக்கப்படும்
250gr 100gr. 50gr பக்கெட்டுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
விலாசம்:
கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு.
சாவகச்சேரி.
கண்டி வீதியிலிருந்து 200 யார் தொலைவில் உள்ளது
(4036)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2. Navalar Road, Jaffna on Sunday, 5th June 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org